தீ விபத்து குறித்து காவல் துறை மற்றும் வல்லுநர்கள் தீவிர விசாரணை மற்றும் ஆய்வு மேற்கொண்டுள்ளதால், சேதமடைந்த விடைத்தாள்கள் விவரம் விசாரணைக்குப் பின்னர் தெரிய வரக்கூடிய சூழ்நிலை உள்ளது. இதுபோன்ற எதிர்பாராத நிகழ்வுகள் கடந்த காலங்களில் நடைபெற்றபோது அரசுத் தேர்வுத் துறை வழக்கமாகக் கடைப்பிடித்து வரும் நடைமுறைகளைப் பின்பற்றி--set procedure—மாணவர்களுக்குப் பரிகாரம் வழங்கப்படும் என்றும், பாதிக்கப்பட்ட விடைத்தாளுக்கு உரிய மாணவர்கள் மீண்டும் தேர்வு எழுதும் நிலை ஏற்படாது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

(முற்பகல் 10-40)

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாட்டு காவல் துறை அதிகாரி திரு. ஜே.கே. திரிபாதி, இ.கா.ப., அவர்களுக்கு பாரதப் பிரதமர் விருது வழங்கப்பட்டிருப்பதற்குப் பாராட்டுத் தெரிவித்தல்

திரு. சி. ஞானசேகரன்: Mr. Speaker Sir . . .

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன? திரு. பீட்டர், one minute. உட்காருங்கள். ஒவ்வொருவராகக் கூப்பிடுகிறேன். (குறுக்கீடுகள்) விதி 110-அறிக்கையின்மேலே விவாதம் கிடையாது. I won't allow you. (Interruptions) No, no. No questions on 110 statement. (Interruptions) அடுத்த சப்ஜெக்ட் பற்றிப் பேசுவதாக இருந்தால் எழுந்திருங்கள். (குறுக்கீடுகள்) I won't allow you. அடுத்த சப்ஜெக்ட் பற்றிப் பேசுவதாக இருந்தால் எழுந்திருங்கள். Otherwise, I won't allow you. திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ், சொல்லுங்கள்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பாராளுமன்ற ஜனநாயக மரபில், பாராளுமன்ற, சட்டமன்ற அமைப்புகள், நீதி நிருவாகம், அரசினுடைய நிருவாகத் துறை, பத்திரிகைகள் ஆகியவை நான்கு தூண்களாக வர்ணிக்கப்படுகின்றன. இவற்றிலே அரசினுடைய பணியிலிருக்கின்ற

2008 ஏப்ரல் 25] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

Civil Service—இந்திய ஆட்சிப் பணியிலேயிருக்கின்ற அதிகாரிகள் சட்டமன்றம், நாடாளுமன்றம் எடுக்கின்ற முடிவுகளுக்கும், அமைச்சரவை எடுக்கின்ற முடிவுகளுக்கும் செயல் வடிவம் கொடுத்து, மக்கள் மத்தியில் எடுத்துச் செல்கின்ற அந்தப் பணியை நம்முடைய ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற Civil Service அதிகாரிகள் கவனித்து வருகிறார்கள். அவர்களுடைய பணித் திறத்தை, அரசுப் பணியில் அவர்களுக்கு இருக்கும் ஆர்வத்தை, நிருவாகப் பணியில் அவர்களுக்கு இருக்கும் ஈடுபாட்டை, தொலைநோக்குப் பார்வையினை, நிருவாக அணுகுமுறையில் கால மாற்றத்திற்கேற்ப நடைமுறை யதார்த்தத்துடன் அவர்கள் அறிமுகப்படுத்துகிற புதிய நிர்வாக அணுகுமுறைகளை, அவர்களது பணிவாரியாக இந்தியா முழுவதும் அதைக் கவனித்து, கண்காணித்து மிகச் சிறந்த அரசுப் பணி அதிகாரிகளுக்கு, Civil Service அதிகாரிகளுக்கு நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள், Prime Minister's Award for Excellence in Public Administration என்ற விருதினை வழங்கி வருகிறார்கள். அத்தகைய விருது இந்த ஆண்டு, நமது தமிழ்நாட்டைச் சேர்ந்த காவல் துறை அதிகாரி திரு. ஜே.கே. திரிபாதி, ஐ.பி.எஸ்., அவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பது தமிழ்நாட்டிலிருக்கின்ற நமக்கெல்லாம் பெருமை. பொது மக்கள் மத்தியிலே பொறுப்பான காவல் துறை அதிகாரியாக அவர் பணியாற்றியதை அங்கீகாரம் செய்து, பொது மக்களது பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்திக்கொள்ளுகின்றபோது, Community Police Module என்ற புதிய அணுகுமுறையை அவர்கள் அறிமுகப்படுத்திய காரணத்தினால், மத்திய அரசு இன்று அதை அங்கீகாரம் செய்து, பிரதம அமைச்சர் அவர்கள், அவருக்கு அந்த Excellence என்கிற அந்த அவார்டையும், ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசையும், ஒரு தங்கப் பதக்கத்தையும், பட்டயத்தையும் வழங்கியிருக்கிறார்கள். நல்ல அதிகாரிகளைப் பாராட்ட வேண்டிய கடமை இந்த அவைக்கு இருப்பதாக நான் நினைக்கிறேன். அப்படிப்பட்ட நல்ல அதிகாரிகளுடைய பணி மேலும் தொடர வேண்டுமென்று வாழ்த்துகின்ற அதே வேளையிலே, தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்த அதிகாரிக்கு அகில இந்திய அங்கீகாரம் கிடைத்ததை இந்த அவை பாராட்டி மகிழ்கிறது என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொண்டு, அமர்கின்றேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு சப்ஜெக்ட் பற்றிப் பேச வேண்டும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வோராண்டும் இந்திய அளவில் இந்தியக் குடிமைப் பணியில், குறிப்பாக, ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., பணியில் பணியாற்றக்கூடிய 6 பேரைத் தேர்வு செய்து பிரதமர் சிறப்பு விருது வழங்குவது தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது. அந்த அடிப்படையில் இந்த ஆண்டு வழங்கப்பட்ட 6 நபர்களில் நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்த காவல் துறையில் பணியாற்றிக்கொண்டிருக்கிற பெருமதிப்பிற்குரிய திரு. ஜே.கே. திரிபாதி, ஐபிஎஸ்., அவர்கள் பிரதமர் அவர்களின் விருது வழங்கப்படத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார். அதிலும் குறிப்பாக, ஒரு இலட்சம் ரூபாய் வெகுமதியும், தங்க மெடலும், ஒரு சிறப்பு விருதும் வழங்கப்படவிருப்பது தமிழ்நாட்டிற்குப் பெருமை. குறிப்பாக, காவல் துறையினுடைய சிறப்புத் தன்மைக்குக் கிடைத்த பரிசாக நாம் கருத வேண்டியிருக்கிறது. ஆகவே, இப்படி திரு. ஜே.கே. திரிபாதி அவர்கள் இந்திய அளவில் தேர்வு செய்யப்பட்டிருப்பவர், இதற்கு முன்னாலே உலக அளவிலே தேர்வு செய்யப்பட்டு, மிகப் பெரிய உலக அளவிலான விருதும் பெற்றிருக்கிறார் என்பது தமிழ்நாட்டிற்கும், காவல் துறைக்கும் பெருமை சேர்க்கிறது என்பதைச் சொல்லி, காவல் துறை அதிகாரிகள், மற்றவர்களும் இவரைப்போலப் பணியாற்ற வேண்டுமென்ற முன்னுதாரணத்திற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறார் என்பதைச் சொல்லி, தமிழ்நாட்டிலே சிறந்த அதிகாரிகள் இருக்கிறார்கள் என்ற அடிப்படையில், விருதுபெற்றவரைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே மனதாரப் பாராட்டி, வாழ்த்தி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இந்தச் செய்தியை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, இந்த அவையின் சார்பாகப் பாராட்டுத் தெரிவிக்க அவர் அனுமதி கேட்டார். அவரும் பேசியிருக்கிறார். பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே அதனுடைய தலைவர் திரு. கோ.க. மணி அவர்களும் பாராட்டியிருக்கிறார்கள்.

2008 ஏப்ரல் 25] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

திதையே இந்த அவையின் சார்பாகப் பாராட்டுவதாக எடுத்துக்கொண்டு, அடுத்த அலுவலுக்குச் செல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

முற்பகல் 10-15

(இ) வாகனங்களில் சுழலும் சிவப்பு விளக்கைப் பயன்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன திரு. ஞானசேகரன், என்ன வேண்டும்? (குறுக்கீடுகள்)

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நேற்றைக்கு முந்தைய நாள் தங்களிடம் வந்து, மாவட்ட பஞ்சாயத்துத் தலைவர் போன்றவர்கள் எல்லாம் சிவப்பு விளக்கினைப் போட்டுக்கொண்டு போய்க்கொண்டுள்ளனர் என்ற ஒரு கருத்தைக் கொண்டு வந்தேன். யார், யாரெல்லாம் சிவப்பு விளக்கைத் தங்களுடைய காரில் பொருத்திக்கொண்டு. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதுரை High Court-ல் ruling கொடுத்து இருக்கிறார்கள். போய்ப் பாருங்கள். (குறுக்கீடுகள்) டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், என்ன? (குறுக்கீடுகள்) மதுரை High Court-ல் ruling கொடுத்து இருக்கிறார்கள். அதை எடுத்துப் பாருங்கள். (குறுக்கீடுகள்) முடியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

(ஈ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு உறுப்பினர்கள் பல பிரச்சினைகளை இங்கே கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் ஏற்கெனவே இங்கு தெரிவித்ததைப்போல், இரண்டு மானியக் கோரிக்கைகள் விவாதிக்கப்பட்டு, இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்லவேண்டியிருக்கின்ற சூழ்நிலையில், மற்ற பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும், நாளை முதல் அவற்றையெல்லாம் எடுத்துக்கொள்ளலாம் என்று கேட்டுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை எடுப்பதற்கான (குறுக்கீடுகள்) தயவுசெய்து இன்று நடைபெறவிருக்கின்ற இரண்டு மானியங்களை நிறைவேற்றித் தருவதற்கு அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS